**மட்டக்களப்பு மாநகர சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மட்டக்களப்பு மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாநகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப நிலுவையாக காட்டப்பட்டிருந்த சம்பள மீளளிப்பு ரூபா 13,795,223 தொகையானது, மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய நிலுவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இக் கணக்கீட்டு தவறானது எதிர்வரும் நிதிக்கூற்றறிக்கையில் கடந்த கால சீராக்கத்தில் சீர்செய்து காட்டப்படும். | பெறப்பட்ட சம்பள மீளளிப்புகள் பெறவேண்டிய தொகைகளிலிருந்து சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டட விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளாமல் நிர்மாணத்தினை மேற்கொண்டிருந்த 23 எண்ணிக்கையான நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத் தொகை ரூபா 1,696,247 நிலுவை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத் தொகையினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏறாவூர்பற்று பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான திண்மக்கழிவு கட்டணம் ரூபா 836,449 மற்றும் ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு செலுத்த வேண்டிய தொலைபேசி, நீர் மற்றும் மின்சாரம் சேவைக்கட்டணத் தொகை ரூபா 359,908 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இவ்விடயங்கள் சீர்செய்யப்படும். | செலுத்த வேண்டியவைகள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 09 எண்ணிக்கையான நூலகங்களிலும் ரூபா 554,583 பெறுமதியுடைய 1,884 புத்தகங்கள் மற்றும் 389 எண்ணிக்கையான விலை குறிப்பிடப்படாத புத்தகங்கள் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நன்கொடைப் புத்தகங்களை நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) | | | |
| | (i) பிரிவு 71(1) | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகளை உள்ளடக்கிய வீதிப்பெயர் பட்டோலை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பிரிவு 212 | மாநகர சபையின் உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கையானது பொதுமக்களின் திறந்த பரீட்சிப்பிற்காக 02 அல்லது அதற்கு மேற்பட்ட பத்திரிகைகளில் அல்லது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீடு வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறு இடம்பெறாது என்பதை அறியத்தருகின்றேன். | சட்டத்தின் பிரகாரம், சபையின் உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கையினை பத்திரிகைகளில் அல்லது வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | (i) இல. 104-110 வரை | பிரதி ஆணையாளரின் அலுவலகத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் ரூபா 800,000 பெறுமதியான PABX System உட்பட அழிவுற்ற தளபாடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பாக பொலீஸ் முறைப்பாடு செய்யப்பட்டதே தவிர அரச நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்படுவதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாண த்தின் பிரகாரம், நட்டம் தொடர்பில் விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) இல. 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 28,259,240 பெறுமதியான 08 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்க அல்லது இவ்வருடம் வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்களை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்க அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 திசெம்பர் 26 ஆம் திகதிய 08/2014 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபையில் காணப்படுகின்ற 22 வாகனங்களுக்கு காப்புறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கான பதிவுப் புத்தகம் பெறப்பட்டு காப்புறுதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களுக்கு காப்புறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 178,416,549 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 156,875,725 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வீதவரியும் வரியும்** | 41.025,000 | 89,067,895 | 34,795,382 | 54,272,512 | 41,000,000 | 46,577,956 | 36,727,599 | 44,644,197 |
| **வாடகை** | 15,300,000 | 33,028,491 | 19,945,068 | 13,083,423 | 27,250,100 | 24,475,385 | 23,566,524 | 16,492,094 |
| **உத்தரவுப் பத்திரக் கட்டணம்** | 18,700,000 | 28,764,226 | 25,400,154 | 3,364,072 | 16,511,000 | 23,152,047 | 23,740,059 | 2,066,751 |
| **ஏனைய வருமானம்** | 111,682,000 | 94,114,292 | 94,114,299 | - | 159,827,000 | 253,065,050 | 239,269,827 | 13,795,223 |
| | **186,707,000** | **244,974,904** | **174,254,903** | **70,720,007** | **244,588,100** | **347,270,438** | **323,304,009** | **76,998,265** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | சோலைவரி நிலுவைகளாக அரச துறை நிறுவனங்களிடம் இருந்து மொத்தமாக ரூபா 2,142,428 தொகை 03 வருடங்களுக்கு மேலாக நிலுவைகளாக காணப்படுவதுடன் இதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகளில் காலதாமதமென்று காணப்பட்டமையினை அவதானிக்ககூடியதாக இருந்தது. | அதிக நிலுவைகளை கொண்ட புகையிரதத் திணைக்களம் மற்றும் மீன்பிடி திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சோலைவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | தனியார் ஆதனங்களான வீடு, கடை மற்றும் நிலம் என்பவற்றிக்கான மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ஆதனவரி ரூபா 44,644,197 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 31,170,262 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வருடாந்த உண்டியல் தொகைகளை உரிய காலத்திற்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த உண்டியல் தொகைகளை உரிய காலத்திற்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி ரூபா 44,423,697 தொகையில் 11 சதவீதமான ரூபா 4,944,113 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வருமான பரிசேதகர் பற்றாக்குறையினால் அறவிடுவது சிரமமாக உள்ளது. | நீண்டகால நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(உ) இன் பிரகாரம் 05 எண்ணிக்கையான தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார உரிமைக் கட்டணத் தொகையான ரூபா 302,500 கடந்த 04 வருடங்களாக சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீலங்கா ரெலிகோம் நிறுவனத்திற்கு நிலுவைகளை அறவிடுவதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டண நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 23 ஆந் திகதிய இறைவரி திணைக்களத்தின் சுற்று நிருப இலக்கம் SEC/2022/03 இன் பிரகாரம், உள்ளூராட்சி நிறுவனங்களினால் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்களின் வட்டி வருமானத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 4,854,181 நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருந்தது. இருப்பினும் இத்தொகையினை இறைவரி திணைக்களத்திடமிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்கான எவ்வித நடவடிக்கையும் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்திவைத்தல் வரியினை வருமான வரித் திணைக்களத்திடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச இல்லங்களை வாடகைக்கு இடல் மூலமாக நீண்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 326,350 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2010ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்ற இல்ல வாடகையினை சீர் செய்யும் நோக்கில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது . | நிலுவை தொடர்பான கோவைகளை இனங்கண்டு வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மாநகர சபைக்கு உபபிரிகை மூலம் கிடைத்த 41 காணிகளின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 41 காணிகளின் பெறுமதியை கணிப்பிட்டு நிலையான தரவுகளை பெறுவதற்காக குழு நியமித்து அதற்கான வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது. | உபபிரிகை மூலம் கிடைத்த காணிகளின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) பிரிவு 188(r) இன் பிரகாரம், முதல்வர் அல்லது ஆணையாளரினால் சபை சார்பாக செய்யப்பட்ட செலவுகளையே சபை நிதி மூலம் ஈடுசெய்ய முடியும். எனினும், மாநகர சபையின் முன்னாள் ஆணையாளருக்கு எதிராக முன்னாள் முதல்வரினால் தனிப்பட்ட ரீதியாக தாக்கல் செய்யப்பட்ட EP/HCB/CC/02/2021 மற்றும் EP/HCB/CC/03/2021 ஆம் இலக்க வழக்குகளுக்கு பிரத்தியேக சட்டத்தரணிக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 248,500 தொகையானது BMC/GM/-59(70)2023-04 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி முதல்வருக்கு மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும், சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட குறித்த கொடுப்பனவினை முன்னாள் முதல்வரிமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலில்லை. | சபை சார்பில் செய்யப்படாத சட்டத்திற்கு முரணான செலவுகளை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் காணியை உபபிரிகை செய்து விற்பனை செய்வது தொடர்பில் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் தனது மற்றும் அவரது மனைவியின் பெயரிலும் 2003 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றி சாத்துதல்கள் புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவிற்கு BC/1829/2015 இலக்கத்தின் முறைப்பாடு செய்யப்பட்டு ஆணைக்குழுவினால் விசாரணை முடிவுறுத்தப்பட்டுள்ளது. | முன்னாள் ஆணையாளரினால் தனது மற்றும் அவரது மனைவியின் பெயரில் பெறப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 13 வாகனங்கள் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்பட்டிருந்தும் அதனை திருத்தி மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கான எதுவித நடவடிக்கைகளும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலில்லை. | வாகனங்களைத் திருத்தி மீளப்பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | களஞ்சியசாலையில் 04 வருடங்களுக்கு மேலாக இருப்பாக காணப்படும் 15 எண்ணிக்கையான ரோனர்களை பயன்படுத்துவதற்கு உரிய பிரிண்டர்கள் இல்லாமையினால் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. | 2024 ஆம் ஆண்டு இருப்பு கணக்கெடுப்பின் போது சீர்செய்யப்படும். | கொள்வனவின் போது தேவையைக் கருத்தில் கொண்டு கொள்வனவுகள் இடம்பெற வேண்டும். |

**3.3 வாகனப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதியும் 30/2016 ஆம் இலக்கமும் கொண்ட அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையினை பின்பற்றாமல் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சபைக்கு சொந்தமான 03 உழவு இயந்திரங்கள் பாரிய எஞ்சின் திருத்த வேலைக்காக பாரம் கொடுத்தல் மற்றும் பாரம் எடுத்தல் நடைமுறை பின்பற்றப்படாது. வாழைச்சேனையிலுள்ள வாகனம் திருத்தும் நிலையத்திற்கு வழங்கப்பட்டு இதன் திருத்த வேலைகள் முழுமையடையாமல் வாகனத்தின் எஞ்சின் பிரிக்கப்பட்ட நிலையில் மீளப் பொருத்தப்படாமல் சபையிடம் மீள வழங்கப்பட்டிருந்தது. | திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உழவு இயந்திரங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாகன ஓட்ட பதிவேடு வழிகாட்டியின் பிரிவு 13இன் பிரகாரம், ஒவ்வொரு தடவை சென்ற விபரங்கள் தனித்தனியாக எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் பூரணப்படுத்தப்பட்டு வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடம் வழங்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் தீயணை பிரிவிற்கென வழங்கப்பட்ட வாகனத்தின் ஓட்டப்பதிவேடு பூரணப்படுத்தப்படாமல் ரூபா 434,946 பெறுமதியான எரிபொருள் பாவனைக்குட்படுத்தப்பட்டது. | பதிலில்லை. | வாகனத்தின் ஓட்டப்பதிவேடு பூரணப்படுத்தப் பட்டு உரிய உத்தியோகத்த ரினால் செவ்வை பார்க்கப்பட வேண்டும். |
| (இ) | தீயணைப்பு பிரிவில் செயற்படுகின்ற வாகனத்திற்கான எரிபொருள் நிரப்பும் போது வாகன ஓட்டப் பதிவேடு சரிபார்ப்பு, எரிபொருள் கட்டளை (Fuel order) மற்றும் இருப்பு காப்பாளர் பரிசீலனை போன்ற நடைமுறைகள் பின்பற்றப்படாது, ரூபா 434,946 பெறுமதியான 1,021 லீட்டர் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. இதன்காரணமாக, சபைக்கு சொந்தமான டீசல் தாங்கியினை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது பதிவேட்டு மீதிக்கும் உண்மை இருப்பு மீதிக்குமிடையே ரூபா 231,744 பெறுமதியான 544 லீற்றர் டீசல் இருப்பு வேறுபாடு காணப்பட்டது. | பதிலில்லை. | பதிவேட்டு மீதியும் உண்மை இருப்பு மீதியும் சமனாக பேணப்படும் வகையில் பதிவுகள் இற்றைப்படுத் தப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, ஆரம்பநிலை மட்டத்தில் 113 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 40 பதவி வெற்றிடங்களும் மூன்றாம் நிலை மட்டத்தில் 04 பதவி வெற்றிடங்களும் சிரேஸ்ட மட்டத்தில் 04 பதவி வெற்றிடங்களும் மொத்தமாக 161 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | பதவி வெற்றிடங்கள் மாகாண பொது நிர்வாக அமைச்சுக்கும் பயிற்சி மற்றும் ஆளணி திணைக்களத்திற்கும் மாதாந்த விபரத்தில் வெற்றிடங்களுக்கான ஆளணி சுட்டிக்காட்டப்பட்டு பொழிப்பு அனுப்பப்படுகின்றது. | ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இறந்த மற்றும் தொழில் வறிதாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா 582,788 ஆகும். | ஒரு ஊழியரின் கடன் நிலுவை மாத்திரம் ரூபா 186,830 ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெறவில்லை. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஊழியர்களுக்கு கடன் வழங்கும்போது அவர்களது சேவைக்காலத்தினை கருத்தில் கொண்டு மீள அறவீடு செய்யக்கூடிய வகையில் கடன் வழங்கப்பட வேண்டும். எனினும், சேவைக் காலத்தினை கருத்தில் கொள்ளாது 11 ஊழியர்களுக்கு கடன் வழங்கியதால் ஏற்பட்ட நிலுவை தொகை ரூபா 599,800 நீண்டகாலமாக அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஓய்வூதியப் பணத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், திருப்பெருந்துறை திண்மக்கழிவு நிலையம் மற்றும் கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலையம் (Night Soil Plant) ஆகியவற்றிக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |